**" கண்ணைக் காப்பது இமை "**
**" மண்ணைக் காப்பது மழை "**

**மதுரை மாநகராட்சி**

# <u>மாமன்றக் கூட்டம்</u>

**2011-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29-ம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## மாமன்ற கூட்ட நிகழ்ச்சி நிரல்

---

கூட்டம் நடைபெற நிர்ணயிக்கப்பட்ட நாளிற்கு ஆறு நாட்களுக்கு முன் அலுவலக நேரங்களில் கூட்டம் தொடர்பான ஏடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகை பெரியார் கூடத்தில் வைக்கப்பெறும்.

*-*-*-*-*-*

**திருக்குறள் :** **" தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு "**

**பொருள் :** செய்யத்தக்க செயலை ஆராய்ந்து தெரிதலும், அதற்குரிய வழிகளைத் தேர்ந்து செய்தலும், பின் தன் கருத்தை ஐயமின்றித் துணிந்து சொல்ல வல்லவன் அமைச்சன்.

**ஆ) தீண்டாமை ஒழிக்க மேற்கொள்ளும்**

## <u>உறுதிமொழி</u>

இந்திய அரசியலமைப்பின்பால். இடைவிடாத. உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய நான். நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்று எந்த வகையிலும் கடைப்பிடிக்கமாட்டேன் என்று, இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும். உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(அரசாணை (நிலை) எண்.245 செய்தி மற்றும் சுற்றுலாத்துறை நாள் 13.11.98)

**<u>1) சி.டபிள்யு.3/16433/2011</u>**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 ஷெடியூல்–1 விதி 19(2)–ன்படி 11.07.2011-ம் தேதி நடைபெற்ற வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.31</u>**
**<u>பதிவு செய்யப்பட்டது</u>**

**2) சி.டபிள்யு.3/16627/2009**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 ஷெடியூல்–1 விதி 19(2)ன்படி 15.07.2011-ம் தேதி நடைபெற்ற வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : வேலைக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.32**

**பதிவு செய்யப்பட்டது**

**3 ) சி.டபிள்யு.3/ 06156 /2010**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 ஷெடியூல்–1 விதி 19(2)–ன்படி 02.07.2011 மற்றும் 19.07.2011-ம் தேதி நடைபெற்ற நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மான விபரங்களை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

குறிப்பு : நகரமைப்பு மற்றும் அபிவிருத்திக்குழு கூட்ட நடவடிக்கை மற்றும் தீர்மானம் விபரங்கள் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.33**

**பதிவு செய்யப்பட்டது**

**4) ம.நி.1/4557/11**

மதுரை மாநகராட்சி ஆணையாளராக திரு.எஸ்.நடராஜன், I.A.S., அவர்கள் அரசாணை எண்.2596. Public (Special A) Department, நாள்:23.07.2011-ன் ஆணையின்படி 27.07.2011 பிற்பகல் முதல் பணியேற்பு செய்துள்ளார். மேற்கண்டவாறு திரு.எஸ்.நடராஜன், I.A.S., அவர்கள் மதுரை மாநகராட்சி ஆணையாளராக பதவி ஏற்பு செய்ய உத்தரவு வழங்கிய அரசாணை எண்:2596, Public (Special A) Department, நாள்:23.07.2011– நாளிட்ட அரசாணையை மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.34**

**பதிவு செய்யப்பட்டது**

**5) ம.நி.1/24366/2011**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.6) துறை அரசாணை (வாலாயம்) எண்.97 நாள்:23.04.2010-ன்படி தூத்துக்குடி மாநகராட்சியில் முதுநிலை நகரமைப்பு அலுவலராக பணிபரிந்த திரு.மு.ராக்கப்பன் அவர்கள் மதுரை மாநகராட்சியில் காலியாக உள்ள செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தில் 26.04.2010 முற்பகல் பணியில் சேர்ந்துள்ளார். இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் அவர்களின் செயல் முறை ஆணை எண்:18172/2010/F4 நாள்: 27.04.2010 ஆணையின் படி 27.04.2010 அன்று மதுரை மாநகராட்சியில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். தற்போது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்:291 நாள்:01.08.2011ன்படி தனியர் 03.08.2011 முதல் மதுரை மாநகராட்சியில் செயற்பொறியாளர் (திட்டம்) பணியிடத்தில் பணியேற்பு செய்துள்ளார். மேற்கண்டவாறு திரு.மு.ராக்கப்பன், செயற்பொறியாளர் (திட்டம்) அவர்களை தற்காலிக பணிநீக்கத்திலிருந்து விடுவித்து, பணியேற்பு செய்ய அனுமதித்து வரப்பட்டுள்ள அரசாணை எண்:291 நாள்:01.08.2011-ஐ மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.35**

**பதிவு செய்யப்பட்டது**

**6) Cw1/11509/2011**

மதுரை மாநகராட்சி உள்ளாட்சி தேர்தல் **–2011** வரும் அக்டோபர்/2011-ல் நடைபெற உள்ளதால், அரசாணை எண்.260, நாள் : 14.07.2011–ன் படி மதுரை மாநகராட்சி உள்ளாட்சி தேர்தல் பணியினை செயல்படுத்துவதற்காக கீழ்கண்ட பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டுள்ளன. (அதாவது 31.10.2011-வரை மட்டும்).

மேற்படி பணியிடங்களுக்கு (வரிசை எண்.1,2–பணியிடங்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலமும், வரிசை எண்.**3** முதல் **7** வரையுள்ள பணியிடங்களுக்கு மதுரை மாநகராட்சி பணி உயர்வில் உள்ள பணியாளர்களை) பணிஉயர்வு செய்தும், அதனால் ஏற்படும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து சரிக்கட்டப்படும் என்ற விபரத்தினையும் மாமன்றத்தின் தகவலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண். | பணியிடம் | பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தாசில்தார் | 1 |
| 2 | துணை தாசில்தார் | 1 |
| 3 | கண்காணிப்பாளர் | 1 |
| 4 | உதவியாளர் | 4 |
| 5 | இளநிலை உதவியாளர் | 2 |
| 6 | தட்டச்சர் | 2 |
| 7 | அலுவலக உதவியாளர் | 2 |
| மொத்தம் | | 13 |

**மாமன்றத்தீர்மானம் எண்.36**
**பதிவு செய்யப்பட்டது**

**7) ம.பொ.7/ ம .எண்.644/10-11**

மதுரை மாநகராட்சி, மேற்கு மண்டலம் வார்டு எண்.29-ல் எல்லீஸ் நகர் பேருந்து சாலையில் தார் சாலை அமைக்க மாமன்ற உறுப்பினர் அவர்களின் பரிந்துரையின் பேரில் மாநகராட்சி வருவாய் நிதி ஆதாரத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவசியம் கருதி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் ஒப்புதல் பெறப்பட்டு முதன் முறையாக 28.02.2011- அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது.

மேற்கண்டவாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்பீட்டு பட்டியல் தயார் செய்யப்பட்டதில், திரு.லிங்கத்துரை, மதுரை ஒப்பந்தக்காரர் மதிப்பீடு விலை விகிதத்தை விட 0.66% குறைவாக தெரிவித்திருந்தார்.

மேற்கண்ட பணியின் அவசியம் கருதி L1 ஒப்பந்தக்காரரான திரு.R.ஞானசேகரன், மதுரை அவர்களின் மதிப்பீடு விலை விகிதத்தினைவிட 1.08% குறைவாக தெரிவித்த விலைப் புள்ளியினை ஏற்றுக் கொண்டு வேலை உத்திரவு வழங்கிட மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.37**
**பின்னேற்பு செய்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) RR1/31034/2006**

மதுரை மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள உள்வட்ட சுற்றுச்சாலையில் (உத்தங்குடி முதல் கப்பலூர் வரை) செல்லும் வாகனங்களுக்கு சுங்க கட்டணம் வசூல் செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் எண். 225/09.06.2000 மற்றும் அரசாணை எண்.149, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் :23.10.2000- ன்படி அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.149, நாள் :23.10.2000- ன் படி 1.11.2000 முதல் 31.10.2005–ம் ஆண்டு வரை 8% சுங்கக் கட்டணம் உயர்வு செய்து வசூல் செய்து கொள்ள அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் 1.11.2005- முதல் 31.10.2006 வரை 8 சதவீதம் சுங்கக் கட்டணம் உயர்வு செய்து வசூல் செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் எண்.231, நாள்:01.08.2005–ம் தேதிய ஒப்புதலின்படி வசூல் செய்து கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மாமன்றம் தீர்மானம் எண்.194, நாள்:26.09.07–ன்படி 01.10.06 முதல் **31.10.2007**–ம் ஆண்டு வரை 8 சதவீதம் சுங்க கட்டணம் உயர்வு செய்து வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் 01.11.2007– முதல் 31.10.2008– ம் ஆண்டு **8** சதவீதம் சுங்க கட்டணம் உயர்வு செய்யாமல் முந்தைய நிலைப்படி சுங்கக் கட்டணம் வசூல் செய்யப்பட்டது.

1.11.2008 முதல் 31.10.2009 வரை சுங்கக் கட்டணம் 8 சதவீதம் உயர்வு செய்து கொள்ள மாமன்ற தீர்மானம் 566, நாள் 25.09.2008–ஆம் தேதி ஒப்புதல் பெறப்பட்டது. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.29, நாள் :31.01.2011- அரசாணையில் 01.11.2005 முதல் 31.10.2010 வரை சுங்க கட்டணம் உயர்வு செய்து வசூல் செய்தமைக்கு அரசு பின்னேற்பு வழங்கியுள்ளது. 01.12.2010 முதல் 31.10.2011 வரை 8 சதவீதம் உயர்வு செய்து வசூலிக்க அரசாணை எண்.74, நாள் :25.05.2011–ன் படி அரசாணை பெறப்பட்டுள்ளது.

01.11.2011 முதல் 31.10.2012 வரை உள்வட்டச் சுற்றுச்சாலையில் 8 சதவீதம் சுங்க கட்டணம் உயர்வு செய்வது குறித்தும் மேற்படி ஆண்டிற்கு சுங்க கட்டணத்தை வசூல் செய்து கொள்ள

டெக்ஸ்கோ பணியாளர்களைக் கொண்டே வசூல் செய்யலாம் என்பதற்கு மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் செயற்குறிப்பு.

(மாமன்ற தீர்மான எண்.225, நாள் :09.06.2000, அரசாணை எண்.149, நாள் :23.10.2000, அரசாணை எண்.29, 31.01.2011 மற்றும் அரசாணை எண்.**74**, நாள் :25.05.2011**–**ம் தற்போதுள்ள கட்டண விகிதங்களும் கோப்பில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது)

**மாமன்றத்தீர்மானம் எண்.38**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ந.பொ.1/22105/2010**

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரதான மற்றும் உப கழிவு நீரேற்று நிலையங்களில் ஏற்படும் இயந்திர பழுதுகளை சம்பந்தப்பட்ட மின் பணியாளர்கள் உடனுக்குடன் கண்காணிப்பாளருக்கு தகவல் தெரிவித்து பழுதின் தன்மையினை சரிசெய்வதற்கு தேவைப்படும் உத்தேச செலவீனம் ஆகியவற்றை குறித்து தொழில்நுட்ப அறிக்கை மற்றும் மதிப்பீடும் தயாரித்து அதை மின் கண்காணிப்பாளருக்கு சமர்ப்பித்து, சம்பந்தப்பட்ட மின்கண்காணிப்பாளர் தலைமை மின் கண்காணிப்பாளர் மூலம் மண்டல உதவி நிர்வாக பொறியாளர் ஒப்புதல் பெற்று நிர்வாக பொறியாளர் மூலம் நகரப்பொறியாளரின் தொழில்நுட்ப அனுமதி பெற்று ஆணையரின் நிர்வாக ஒப்புதல் பெற்று பழுது ஏற்பட்ட 24 மணி நேரத்திற்குள் பழுதினை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், மேற்கண்ட கழிவு நீரேற்று நிலையங்களில் ஏற்படும் சிறிய பழுதுகளை உடனுக்குடன் சரி செய்ய மண்டல மின் கண்காணிப்பாளர் ஒவ்வொருவருக்கும் ரூ.10,000/- முன் பணம் வழங்கவும், மேற்கண்ட கை இருப்பு முன் பணத்தின் மூலம் செய்யப்பட்ட பணியின் விபரம் மற்றும் தொகை குறித்து சம்பந்தப்பட்ட மண்டல மின் கண்காணிப்பாளர்கள் தலைமை மின் கண்காணிப்பாளர் மூலம் நிர்வாக பொறியாளர் ஒப்புதல் பெற்று மேற்கண்ட பணிகளில் நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றத்தின் உரிய ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.39**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) A3/17181/10**

மாநகராட்சி வார்டு எண்.59-ல் உள்ள மாநகராட்சி வில்லாபுரம் நடுநிலைப்பள்ளி தனியார் கட்டிட வாடகையை உயர்த்த வீட்டு உரிமையாளர்கள் விண்ணப்பத்தினை பரிசீலித்து மாதம் ரூ.19442/- என நிர்ணயித்து மாமன்ற கூட்டக்குறிப்பு தீர்மானம் எண்.18 நாள்:15.06.2011-ல் குறிப்பு ஒப்புக்கெள்ளப்பட்டது. உரிமையாளர்கள் மேற்கண்ட வாடகையை திருமதி.V.இராஜேஸ்வரி என்பவருக்கு மாதம் ரூ.13,000/- எனவும், திரு.என்.வெயில்முத்து என்பவருக்கு மாத வாடகை ரூ.6442/- என பங்கீடு செய்து 02.06.2010 தேதி முதல் முன் தேதியிட்டு நிலுவைத்தொகை வழங்க மாமன்றத்தின் ஒப்புதலைக்கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.40**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்...)ஜி.தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

**மதுரை**
**நாள் :29.08.2011**

"கண்ணைக் காப்பது இமை"
"மண்ணைக் காப்பது மழை"

# மதுரை மாநகராட்சி

# மாமன்றக் கூட்டம்

**2011-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 29-ம் நாள் திங்கட்கிழமை காலை 12.00 மணிக்கு**

## அறிஞர் அண்ணா மாளிகை
## பெரியார் கூடத்தில் நடைபெறவிருக்கும்
## மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின்
## அவசரக் கூட்ட நிகழ்ச்சி நிரல்

**1) H4/02209/11**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு அனுப்பானடி ஆயுர்வேத மருந்தகத்தில் திரு.Dr.S.பாலசுப்பிரமணியம், மருத்துவ அலுவலராக கடந்த 20.03.2000 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார். மேற்படி, மருத்துவ அலுவலரின் பணியிடம் ஒவ்வொரு ஆண்டும் அரசிடம் அனுமதி பெற்று அன்னார் தொடர்ந்து அனுப்பானடி ஆயுர்வேத மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார். இந்நிலையில் அனுப்பானடி மருத்துவ அலுவலர் பணியிடத்தை நிரந்தரமாக நீட்டித்து அனுமதி வழங்கிய அரசு ஆணை எண்.(2டி) 32, நாள் :18.05.2010, கடந்த 21.12.2010-ந் தேதிய மாமன்ற கூட்டத்தில் ஆணையாளர் குறிப்பு வைக்கப்பட்டு மேற்படி, ஆணையாளர் குறிப்பு மாமன்ற தீர்மானம் எண்.976-ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி, அரசாணை மற்றும் மாமன்றத் தீர்மானத்தின்படியும் அனுப்பானடி ஆயுர்வேத மருந்தகத்தில் மருத்துவ அலுவலர் பணியிடத்தில் திரு.டாக்டர்.S.பாலசுப்பிரமணியம் அவர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். ஆகவே, அனுப்பானடி ஆயுர்வேத மருந்தக மருத்துவ அலுவலராக பணியேற்ற நாள் :20.03.2000 முற்பகல் முதல் 19.03.2002 பிற்பகல் முடிய இரண்டு வருடங்கள் பணி காலம் முடிவடைந்து விட்டதால், அன்னார் 20.03.2000 மு.ப. முதல் பணிவரன் முறைபடுத்தியும், தகுதிகாண் பயிற்சி காலத்தை திருப்திகரமாக முடித்ததனை அறிவிக்கவும் மாமன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.41**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**2) Jn.S.5/33640/08**

மதுரை மாநகராட்சி, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் ஐந்து திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அவற்றில் இரண்டாவது வைகை குடிநீர் திட்டம் மற்றும் வைகையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைத்தல் போன்ற பணிகள் முடிவுற்று பயன்பாட்டில் உள்ளது. மதுரை மாநகராட்சியின் பங்குத் தொகையினை தற்போது மதுரை மாநகராட்சியின் வருவாய் பற்றாக்குறையாக உள்ள காரணத்தினால் அரசிடம் கடனாகவோ, மானியமாகவோ பெறவும் அல்லது TUFIDO & TNUFISL போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து நிபந்தனைகளின் அடிப்படையில் கடனாக பெற்று ஈடு செய்து கொள்ளவும் முடிவு செய்யப்பட்டு, இதற்கென மாமன்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டு (மாமன்றத் தீர்மானம் எண்.1020 & 1021, நாள்: 20.01.2011) கடன் பெறுவதற்கான முன்மொழிவு நகராட்சி நிர்வாக ஆணையர் மூலம் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலையில் கொடுக்கப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் அரசின் நிதி நிறுவனமான “ஹட்கோ” விடமிருந்து சுமார் ரூ.300.00 கோடி பெறலாம் என முடிவு செய்யப்பட்டது. இந்நிலையில் தற்போது நடைபெற்று வரும் மூன்று திட்டப் பணிகளும் முடிவுறும் நிலைக்கு கொண்டு வந்தால் மட்டுமே, மத்திய மற்றும் மாநில அரசுகளிடமிருந்து நான்காவது தவணை பெற இயலும். இந்நிலையில் கடந்த 28.06.2011ம் தேதியன்று ஹட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் அவர்களிடமிருந்து (கடித எண்.JnNURM:VGF(76) Vol.II) உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிபந்தனைகளின் அடிப்படையில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்திற்கு கடன் தர சம்மதித்து செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களுக்கு அனுப்பியுள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள், அலுவலக கடிதம் எண்.

30788/2011/JnN1, நாள்:22.07.2011-ல் திட்டப் பணிகளை நிறைவேற்றி முடித்திட தேவையான தொகையினை “ஹட்கோ” நிறுவனத்திடம் பெற்று கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

இதன் அடிப்படையில் இத்திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு ரூ.300.00 கோடியினை திருப்பிச் செலுத்தும் கடனாக ஹட்கோ நிதி நிறுவனத்தின் நிபந்தனைக்குட்பட்டு பெறவும் இதற்கென நகராட்சி நிர்வாக ஆணையரகம் மூலம் அரசின் ஒப்புதலைப் பெறவும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.42**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**3) ம.பொ.2/15872/08**

மதுரை மாநகராட்சி, லாரி நிறுத்துமிடத்தில் கனரக மற்றும் இலகுரக வாகனங்களின் பழுதடைந்து உதிரிபாகங்கள் பல ஆண்டு காலமாக உபயோகமற்ற நிலையில் உள்ளது. அவற்றின் உத்தேச எடை 2000 கிலோ ஆகும். அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | உதிரி பாகங்களின் விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1. | பழைய அம்பாசிடர் பெட்ரோல் எஞ்ஜின் TNU 7677, TN 59 L 0005 & TN 59 M 1234 | 3 எண்ணம் |
| 2. | குடிநீர் டிரெய்லர் டேங்க் | 1 எண்ணம் |
| 3. | குடிநீர் டேங்க் | 1 எண்ணம் |
| 4. | 3 mm டம்பர் பின் | 6 எண்ணம் |
| 5. | தார் பாய்லர் | 1 எண்ணம் |
| 6. | லாரி பின்புற பாடி | 1 எண்ணம் |
| 7. | வாகனங்களில் கழற்றப்பட்ட உதிரி பாகங்கள் | 300 கிலோ |

மேற்கண்ட உதிரி பாகங்களை டெண்டர் மற்றும் ஏல முறையில் விற்பனை செய்வதற்கு கடந்த 28.05.08 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண்.399, நாள்:28.05.08) ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட மாமன்ற ஒப்புதலின்படி உதிரி பாகங்களை ஏல முறையில் விற்பனை செய்ய உள்ளூர் சந்தை விலை விகிதம் 2008ம் ஆண்டு விலை விகிதத்தின் படி கிலோ ஒன்றுக்கு ரூ.18.30 ஆகும்.

மேற்கண்ட உதிரி பாகங்களை விற்பனை செய்யும் பொருட்டு தற்போதைய உள்ளூர் விலை விகிதம் கிலோ ஒன்றுக்கு சுமார் ரூ.19.00 ஆகும். தற்போதைய விலை விகிதத்தின் அடிப்படையில் உத்தேச எடை 2000 கிலோவிற்கு ஆக மொத்தம் உத்தேச தொகை ரூ.38,000/- ஆகும். எனவே மேற்கண்ட தொகைக்கு உதிரிபாகங்களை டெண்டர் மற்றும் ஏலம் விட்டு அப்புறப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.43**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**4) ம.பொ.2/19862/10**

மதுரை மாநகராட்சி, லாரி நிறுத்துமிடத்தில் வாகனங்களுக்கென உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ள பல்வேறு வகை மற்றும் அளவுள்ள ஊர்திகளின் உருளைகளை (டயர்கள்) அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே விற்பனை செய்வதற்கு ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட ஒப்பதலின் அடிப்படையிலும் தமிழக அரசினால் ஒப்புதல் தெரிவிக்கப்பட்ட (அரசாணை (D) எண்.1150, உள்(போக்குவரத்து – 4) துறை, நாள்: 13.11.2009-ன்) அடிப்படையில் சேலம், வீரபாண்டி அம்பேத்கார் கிராம சேவா சங்கத்திற்கு விற்பனை செய்வதற்கு கீழ்கண்ட உருளைகள்(டயர்கள்) அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:

| வ. எண். | டயர்கள் மற்றும் டியூப்களின் அளவு விபரம் | எண்ணம் | விலை விகிதம் ஒரு எண்ணத்திற்கு (ரூபாயில்) | மொத்த தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|
| 1. | 8.25 X 16 (கனரக ஊர்திகளின் உருளை) | 144 எண்ணம் | 300.00 | 43200.00 |
| 2. | 7.50 X 16 (கனரக ஊர்திகளின் உருளை) | 102 எண்ணம் | 300.00 | 30600.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | 9.00 X 20 (கனரக ஊர்திகளின் உருளை) | 28 எண்ணம் | 300.00 | 8400.00 |
| 4. | 9.00 X 16 (கனரக ஊர்திகளின் உருளை) | 4 எண்ணம் | 300.00 | 1200.00 |
| 5. | 16.90 X 28 (கனரக ஊர்திகளின் உருளை) | 12 எண்ணம் | 300.00 | 3600.00 |
| | **மொத்தம்** | **290 எண்ணம்** | | **87000.00** |

மேற்கண்ட உருளைகளை (டயர்கள்) அரசாணையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலை விகிதத்திலேயே மேற்கண்ட நிறுவனத்திற்கு விற்பனை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.44**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**5) JnS1/04454/10**

தற்போது இயங்கி வரும் மத்திய காய்கறி அங்காடியை விவசாயிகள் விற்பனையாளர்கள் மற்றும் நுகர்வோர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படையான வசதிகளுடன் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாடு மாநில வேளாண்மை விற்பனை வாரியத்தின் (Tamilnadu state Agriculture Marketing Board) மூலம் ஒருங்கிணைந்த பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான 26.74 ஏக்கர் காலி இடத்தில் சர்வே எண் டிஸ்.நம்பர் 5/1, 5/2, 9/1 (Part of Madurai Corporation மாட்டுத்தாவணி மதுரை–ல்) புதிய மத்திய காய்கறி அங்காடி கட்டுவதற்கு மாமன்ற தீர்மான எண்:878 நாள்:25.02.2010–ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்படி இடத்தில் பொது மக்களுக்கு தேவைக்கு தகுந்த மாதிரி புதிய திட்டத்தை மேற்படி இடத்தில் செயல்படுத்த பரிசீலனையில் உள்ளதால், அவனியாபுரத்தில் அருப்புக்கோட்டை சாலையில் உள்ள அமைந்துள்ள மதுரை மாநகராட்சிக்கு சொந்தமாக உள்ள அவனியாபுரம் சர்வே எண்.307–ல் உட்பிரிவு எண்கள்:1,2,3A,4,5A,6A,3C,6C,7B மற்றும் 8 ஆகியவற்றில் கட்டுப்பட்ட 6 ஏக்கர் 77 சென்ட் அயன்பாப்பாகுடி சர்வே எண். 9–ல் உட்பிரிவு எண்கள் 1,2,3A மற்றும் 4A ஆகியவற்றில் கட்டுப்பட்ட 4 ஏக்கர் 63–சென்ட் ஆக மொத்தம் 11 ஏக்கர் 40–சென்ட் பரப்பு இடத்தில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசு அனுமதி பெற்று தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு காய்கறி அங்காடி அமைக்க மாமன்ற தீர்மானம் எண்:1003 நாள்:22.11.2010 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்நிலையில் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்தின் 10.07.2011 நாளிட்ட கடிதத்தில் மாட்டுத்தாவணி அருகில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 26.74 ஏக்கர் காலியிடத்தில் மத்திய காய்கறி அங்காடி கட்டுவதற்கு தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையை மத்திய அரசு ஒப்புதல் வழங்கி முதல் தவணை மற்றும் மானியம் மத்திய அரசிடம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது எனவும் மத்திய அரசால் மாட்டுத்தாவணி பகுதியுள்ள இடத்தில் காய்கறி அங்காடி கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட பின்பு வேறு இடத்திற்கு மாற்ற இயலாது எனவும் மேலும் மாற்று இடமாக வழங்கப்பட்ட அவனியாபுரம் பகுதியில் இத்திட்டம் மேற்கொண்டால் கீழ்காணும் இடர்பாடுகள் ஏற்படும் என தமிழ்நாடு வேளாண்மை மாநில விற்பனை வாரியம் சென்னை அவர்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. 26.74 ஏக்கர் பரப்பில் உத்தேசிக்கப்பட்ட திட்டத்தினை சுமார் 11.40 ஏக்கர் பரப்பில் மாற்றுவதால், நவீன உட்கட்டமைப்பு வசதிகளான குளிர்சாதன கிட்டங்கிகள், தரம்பிரிப்பு மற்றும் ஏல மையம் ஆகியவற்றை செயல்படுத்த இயலாது. மேலும், இத்திட்டத்தின் தன்மையும்(Scope) மாறுபடும்.
2. அவனியாபுரம் பகுதியில் தாழ்வான மற்றும் கழிவுநீர் தேங்கும் பகுதி என்பதால் கட்டடங்கள் கட்ட பொருத்தமாக அமையாது.
3. பல ஆண்டுகளாக கழிவுநீர் குட்டையாக பயன்பட்டு வந்த அவனியாபுரம் பகுதியின் மண் கடினத் தன்மை (Soil Bearing Strength) மிகவும் குறைவானமாக இருக்கும்.
4. இடப்பரப்பு குறைவாக உள்ளதால் விசாலமான சாலை வசதிகள் மற்றும் பிற கட்டடங்கள் அமைக்க இடம் போதுமானதாக இருக்காது.
5. அவனியாபுரத்தில் புறவழிச்சாலையில் போக்குவரத்து நெரிசல் உண்டாகும். ஆகவே அவனியாபுரம் தளம் உகந்தது அல்ல.

எனவே மாமன்ற தீர்மான எண்.878 நாள்:25.02.2010–ல் கண்டுள்ள குத்தகை மற்றும் நிபந்தனைகள் அடிப்படையில் மாட்டுத்தாவணி அருகில் உள்ள 26.74 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு வேளாண்மை விற்பனை வாரியத்திற்கு குத்தகை அடிப்படையில் அரசின் அனுமதி பெற்று வழங்குவதற்கு மாமன்ற ஒப்புதல் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.45**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**6) H3/10196/07**

மதுரை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கொசு ஒழிப்பு பணிக்காக ஒரு மண்டலத்திற்கு தலா 15 நபர்கள் வீதம், நான்கு மண்டலத்திற்கு 60 நபர்களை வேலை வாய்ப்பு துறை அலுவலக பதிவு அட்டையுடன் திருவிழா காலங்களில் ஆள் எடுப்பது போல் முற்றிலும் தற்காலிகமாக தினக்கூலிகளாக 60 நபர்கள் பணிக்கு எடுக்கப்பட்டு பணி செய்து வருகின்றனர். தற்சமயம் இப்பணியாளர்களின் பணிக்காலம் 15.07.2011-ல் முடிவடைந்து விட்டது. பொது மக்கள் நலன் கருதியும் மீண்டும் பணியினை தொடரவும் 17.07.2011 முதல் 89 நாட்களுக்கு பணியினை நீட்டிப்பு செய்து பணி செய்யப்பட்டு வருகின்றது. மேற்படி பணிக்கு மாநகராட்சி பொது நிதியில் இருந்து தினக்கூலி அடிப்படையில் உரிய ஊதியம் வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.46**
**கொசு ஒழிப்பு பிரிவில் ஏற்கனவே நிரந்தர கொசுமருந்து பணியாளர்கள் எத்தனை பேர் பணியில் உள்ளார்கள். அதன் விபரத்தை குறிப்பிட்டு அடுத்த கூட்டத்தில் பொருள் வைக்க மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**7) ம.ந.2/08448/10**

இம்மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் ஏப்ரல் 2006 முதல் நாய்கள் கருத்தடை மையம் மற்றும் நாய்களுக்கு வெறிநோய் கடி தடுப்பு மையம் செயல்பட்டு வருகின்றது.

இம்மையத்தில் 2006-07ம் நிதியாண்டிற்கு 3277-ம், 2007-08ம் நிதியாண்டிற்கு 4030-ம் மற்றும் 2009-10ம் நிதியாண்டிற்கு 4907 நாய்கள் பிடிக்கப்பட்டு, பிடிக்கப்பட்ட நாய்களை கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டதுடன் வெறிநோய் தடுப்பூசி வழங்கப்பட்டு பிடித்த இடங்களில் விடப்படுகிறது.

மேற்படி திட்டத்தை செயல்படுத்துவதற்கு கீழ்கண்ட விபரப்படி மாநகராட்சி பொதுநிதியில் இருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

| ஆண்டு | பிடிக்கப்பட்ட நாய்கள் | பிடிக்க / விடுவதற்கு வழங்கப்படும் தொகை | கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் மதிப்பூதிய மருத்துவருக்கு வழங்கப்பட்ட தொகை | நாய்களை கவனிப்பவர்களுக்கு (Attender) வழங்கப்பட்ட தொகை | நாய்களுக்கு உணவு வழங்கப் படுவதற்காக வழங்கப்பட்ட தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2006-07 | 3279 | 81975 | 196740 | 163950 | 229530 | **672195** |
| 2007-08 | 4030 | 100750 | 241800 | 201500 | 282100 | **826150** |
| 2008-09 | 4934 | 123350 | 296040 | 246700 | 345380 | **1011470** |
| 2009-10 | 4907 | 122675 | 294420 | 245350 | 343490 | **1005935** |
| மொத்தம் | **17150** | **428750** | **1028980** | **857500** | **1200500** | **3515750** |

மேற்படி விபரப்படி ரூ.35,15,750/- ம் 2006-07 ம் நிதியாண்டு முதல் 2009-10-ம் நிதியாண்டு முடிய நாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மையத்திற்கு மருந்துகள் பெற்ற வகைக்கு ரூ.3,00,000/- ம் கருத்தடை அறுவை சிகிச்சை செய்த நாய்களுக்கு தடுப்பு மருந்து பெற்ற வகைக்கு 2006-07முதல் 2009-10-ம் நிதியாண்டு முடிய ரூ.4,12,571/-ம் ஆக மொத்தம் ரூ.42,28,321/- செலவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தொகையில் விலங்குகள் நல வாரியத்திலிருந்து 50% மான்யமாக 2006-07 ம் நிதியாண்டுக்கு ரூ.4,65,000/- ம், 2007-08-ம் நிதியாண்டுக்கு ரூ.6,24,650/-ம் 2008-09ம் நிதியாண்டுக்கு ரூ.6,39,530/-ம் 2009-10-ம் நிதியாண்டுக்கு ரூ.10,91,585/-ம் ஆக மொத்தம் ரூ.28,20,765/- பெறப்பட்டுள்ளது என்ற விபரத்தை (மாமன்ற தீர்மானம் எண்.1039 நாள்:09.02.2011) மாமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டதில், மேற்படி தீர்மானம் ஒத்தி வைக்கப்பட்டது. இந்நேர்வில் 2010-2011-ம் நிதியாண்டிற்கு இம்மாநகராட்சியில் 6367 தெருநாய்கள் பிடிக்கப்பட்டு கருத்தடை அறுவை சிகிச்சை செய்யப்பட்டு உரிய தடுப்பு மருந்து வழங்கப்பட்டதுடன் நாய்கள் பிடிக்கப்பட்டதுடன் இந்நிதியாண்டிற்கு விலங்குகள் நல வாரியத்திலிருந்து 50% மானியத்தில் முதல் தவணையாக ரூ.9,06,910/- அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற விபரத்தை மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலையும் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.47**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**8) A3/16708/2011**

மதுரை மாநகராட்சி வார்டு எண்.61-ல் உள்ள ஜெய்ஹிந்த்புரம் நடுநிலைப்பள்ளி மிகவும் பழுதடைந்த சூழ்நிலையில் உள்ளதால் மாணவர்களின் கல்வி நலனைக்கருத்திற்கு கொண்டு அருகாமையில் உள்ள தனியார் திரு.R.M.சேக்கப்பன் என்பவருக்குச் சொந்தமான கட்டிடத்தில் மாதவாடகை ரூ.17,010/-க்கு பள்ளி இயங்க சம்மதம் தெரிவித்து ஒப்புதல் அளித்து உள்ளார்.

மேற்கண்ட ஜெய்ஹிந்த்புரம் நடுநிலைப்பள்ளி இக்கட்டிடத்தில் இயங்க மாமன்ற ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.48**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**9) ம.பொ.2/15870/2008**

மதுரை மாநகராட்சி லாரி நிறுத்துமிடத்தில் பயனற்ற வாகனங்கள் (Condemnted Vechicles ) தற்போது கடந்த பல ஆண்டு காலமாக உபயோகமற்ற நிலையில் இருந்து வருகிறது. அவற்றின் உத்தேச எடை 23000.கிலோ ஆகும். வாகனங்களின் விபரம் பின்வருமாறு

| வ. எண். | வாகனத்தின் பெயர் | வாகன எண். | வாகனத்தின் தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1 | Ashok Leyland | TCB 4161 | Condemned Scrap Condition |
| 2 | B. Ford | MDU 9679 | |
| 3 | Fargo | MDA 201 | |
| 4 | Benz | MDA 891 | |
| 5 | Ashok Leyland | TN A 3961 | |
| 6 | Ashok Leyland | TN A 4131 | |
| 7 | Ashok Leyland | TAU 6516 | |
| 8 | Ashok Leyland | TN 59 A 1420 | |
| 9 | Ashok Leyland | TN 59 8543 | |
| 10 | 31298 | Escort / JCP / Backhoe Loader /1990-92 Make | |
| 11 | 31318 | Escort / JCP / Backhoe Loader /1990-92 Make | |
| 12 | 31324 | Escort / JCP / Backhoe Loader /1990-92 Make | |
| 13 | 32968 | Escort / JCP / Backhoe Loader /1990-92 Make | |
| 14 | 36353 | Escort / JCP / Backhoe Loader /1990-92 Make | |

மேற்கண்ட வாகனங்களை டெண்டர் மற்றும் ஏல முறையில் விற்பனை செய்வதற்கு கடந்த 28.05.08 அன்று நடைபெற்ற மாமன்றக் கூட்டத்தில் (மாமன்ற தீர்மானம் எண்.398, நாள்:28.05.08) ஒப்புதல் பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்கண்ட மாமன்ற ஒப்புதலின்படி மேற்கண்ட வாகனங்களை ஏல முறையில் விற்பனை செய்ய உள்ளூர் சந்தை விலை விகிதம் 2008-ம் ஆண்டு விலை விகிதத்தின்படி கிலோ ஒன்றுக்கு ரூ.18.30 ஆகும்.

மேற்கண்ட வாகனங்களை விற்பனை செய்யும் பொருட்டு தற்போதைய உள்ளூர் சந்தை விலை விகிதம் கிலோ ஒன்றுக்கு ரூ.19.00 ஆகும். மேற்கண்ட தற்போதைய விலை விகிதத்தின் அடிப்படையில் உத்தேச எடை **23000** கிலோவிற்கு ஆக மொத்தம் உத்தேச தொகை ரூ.4,37,000/- ஆகும். எனவே மேற்கண்ட தொகைக்கு உதிரிபாகங்களை டெண்டர் மற்றும் ஏலம் விட்டு அப்புறப்படுத்த மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.49**

**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**10) B.30/24088/09**

மதுரை மாநகராட்சியில் ஆட்பற்றாக்குறையினை ஈடு செய்யும் பொருட்டு வெளி கொணர்வு முறையில் (Out Sourcing) ஒப்பந்த அடிப்படையில் கீழ்கண்ட கோப்புகளின் அடிப்படையில் பணியாளர்கள் சப்ளை செய்ய உரிய முறையில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு வணக்கத்திற்குரிய மேயர் முன் ஒப்புதல் பெற்று சப்ளை உத்தரவு கடந்த 31.10.2009 அன்று ஓர் ஆண்டு காலத்திற்கு மட்டும் (01.11.09 முதல் 31.10.10 வரை) நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்பட்டது. (மாமன்ற தீர்மானம் எண்.800 நாள்:28.10.09) அவசியத்தினை முன்னிட்டு ஏற்கனவே சப்ளை செய்து வந்த விலை

விகிதத்திலேயே சப்ளை செய்ய கடந்த 31.03.2011 வரை நீடிப்பு செய்யப்பட்டது. பின்னர் சட்டமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டதின் பேரில் தேர்தல் நன்நடத்தை விதிகள் அமுலுக்கு வந்ததின் பேரில் இப்பணியிடங்களுக்காக புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலவில்லை. மதுரை மாநகராட்சியின் அத்தியாவசிய பணிகள் பாதிப்படைய கூடாது என கருதி வரும் 30.06.2011 வரை மேலும் கால நீடிப்பு செய்யப்பட்டது. (மாமன்ற தீர்மானம் எண்.12 நாள்:15.06.11) மேலும் இப்பணியிடங்களுக்காக புதிய ஒப்பந்தப்புள்ளிகள் 4.7.11ம் தேதியன்று கோரப்பட்டதின் காரணமாக அவசியத்தினை முன்னிட்டு ஏற்கனவே சப்ளை செய்து வந்த விலை விகிதத்திலேயே 31.07.11 வரை மேலும் கால நீடிப்பு செய்ய வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் ஒப்புதல் பெறப்பட்டது. புதிய ஒப்பந்த புள்ளிகள் 4.7.11-ல் கோரப்பட்டு, பெறப்பட்டதில் ஒப்பந்த புள்ளி திறப்பு குழுவால் திறக்கப்பட்டு தொழில் நுட்ப தகுதி ஒப்பீடு செய்யப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகள் எதுவுமே தகுதி பெறவில்லை. ஒப்பந்த திறப்பு குழுவின் அறிக்கையை ஏற்று மறு ஒப்பந்தம் கோர ஆணையாளரால் ஒப்புதல் பெறப்பட்டு, நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு, இப்பணிகளுக்கான புதிய ஒப்பந்தப்புள்ளி வரும் 17.08.2011 தேதியன்று கோரவுள்ள நிலையில் பொதுமக்களின் அத்தியாவசியப் பணிகள் பாதிப்படைவதை கருத்தில் கொண்டும், நிர்வாக நலன் கருதியும், கீழ்கண்ட கோப்புகளின் படி ஒப்பந்த அடிப்படையில் பணியுரியும் ஒப்பந்த பணியாளர்களை 31.08.11 ம் தேதிவரை கால நீடிப்பு செய்து சப்ளை செய்ய மாமன்றத்தின் ஒப்புதலும், ஏற்கனவே 31.07.11ம் தேதி வரை சப்ளை செய்யப்பட்டமைக்கான காலநீடிப்புக்கு உரிய பின்னேற்பு ஒப்புதலும், பெற மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளரின் குறிப்பு.

***<u>கோப்புகளின் விபரம் பின்வருமாறு :–</u>***

| *வ. எண்.* | *கோப்பு எண் மற்றும் பணியாளர்களின் தன்மை* | *பணியாளர்கள் பணிபுரியும் மண்டலம்* |
|---|---|---|
| 1 | B 30/24088/09<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | வடக்கு |
| 2 | B 30/24089/09<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | கிழக்கு |
| 3 | B 30/24090/09<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | மேற்கு |
| 4 | B 30/24091/09<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | தெற்கு |
| 5 | B 30/24094/09<br>கனரக வாகன ஓட்டுனர்கள் | லாரி நிறுத்துமிடம் |
| 6 | B 30/24096/09<br>இலகுரக வாகன ஓட்டுனர்கள் | லாரி நிறுத்துமிடம் |
| 7 | B 30/24097/09<br>தேர்ச்சி திறனற்ற பணியாளர்கள் | லாரி நிறுத்துமிடம் |
| 8 | B 30/24092/09<br>கணினி உதவியாளர்கள் | மைய அலுவலகம் (பொறியியல் பிரிவு) |
| 9 | B 30/26298/09<br>தொழில்நுட்ப உதவியாளர்கள் | அனைத்து மண்டலங்கள் |
| 10 | B 30/24086/09<br>மின் கம்பியாளர்கள் | அனைத்து மண்டலங்கள் |
| 11 | Q 1/26267/09<br>கணிப்பொறி உதவியாளர்கள் | மைய மற்றும் மண்டல அலுவலகங்கள் |

**<u>மாமன்றத்தீர்மானம் எண்.50</u>**

**<u>பொருளில் குறிப்பிட்டுள்ள பணியாளர்கள் அனுமதி காலம் 31.07.2011–முடிவடைந்த நிலையில் ஆகஸ்ட் மாதத்திற்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்ஒப்புதல் பெறப்படாமல் வரப்பெற்றுள்ளது. எனவே பட்டியலிடப்பட்ட கோப்புகளை தனித்தனியாக பணியாளர் பணியாற்றிய விபரங்களுடன் கோப்புகள் தனித்தனியாக அடுத்த கூட்டத்தில் பொருள் வைக்க மாமன்றம் தீர்மானிக்கின்றது.</u>**

**11) H4/32525/10**

மதுரை மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவு காஜிமார் மருந்தகத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர்.J.கிறிஸ்டோபர், 29.09.2008 முற்பகல் பணியில் சேர்ந்து 28.09.2010 பிற்பகல் இரண்டு வருடங்கள் முடிவடைந்து விட்டதால், அன்னாரது பணியை மருத்துவ அலுவலர் பணியிடத்தில் 29.09.2008-ல் பணி வரன் முறைப்படுத்தியும், 29.09.2010 பிற்பகலில் தகுதி காண்பருவம் பயிற்சிக் காலத்தை திருப்திகரமாக முடித்ததாகவும் ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் ஒப்புதலை கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.51**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**12) சி.டபிள்யு./ 27004 /2011**

மதுரை மாநகராட்சி 54-வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜே.டி.அமுதா கடந்த 28.02.2011, 15.06.2011 மற்றும் 11.07.2011 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாமன்ற கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 60-ல் சொல்லப்பட்டுள்ளவைகளுக்குட்பட்டு மை சட்டம் பிரிவு 57(1) (கே)–ன்படி ஒரு மாமன்ற உறுப்பினர் கடைசியாக கலந்து கொண்ட கூட்டத்திலிருந்தோ அல்லது பதவியேற்றத்தில் இருந்தோ தொடர்ந்து மூன்று மாதங்கள் கலந்து கொள்ளாமல் இருப்பாராயின், அவர் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழந்தவராக கருதப்பட வகை செய்யப்பட்டுள்ளது.

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4)-ல் கண்டுள்ளவாறு இவ்வாறு தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளாத நிலையில் மாமன்ற உறுப்பினர் தகுதியை இழப்பதை மாமன்றத்திற்கு தெரிவித்து, மாமன்றத்தின் முடிவைக் கோரும் ஆணையாளரின் குறிப்பு.

**குறிப்பு :**

மதுரை மாநகராட்சி சட்டம் 1971 பிரிவு 57(4)ல் ஆணையாளர் அறிக்கை அளித்து மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டதன் பேரில் மாமன்றம் அவ்வாறான ஒருவர் மீது மீண்டும் மாமன்ற உறுப்பினராக அமர்த்தி தீர்மானிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.52**
**மதுரை மாநகராட்சி சட்டம் 1971–பிரிவு 57(4)–பிரிவின்படி மாமன்ற உறுப்பினர் பதவி வகிக்க இயலாது என்று மாமன்றம் தீர்மானிக்கின்றது.**

**13) மநி1/21015/2008**

மதுரை மாநகராட்சி பணியாளர்களுக்கு வெளியிடப்பட்ட பணிவிதிகள் அரசாணை நிலை எண். 237 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் : 26.09.1996– கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பணிஉயர்வு செய்வதற்கு கீழ்கண்டவாறு தகுதி மற்றும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளது.

| Name of the post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Accounts Officer | i) By promotion from the holders the post of Suerintendents of the Corporation General Subordinate Service.<br>(or)<br>ii) By Transfer from the holder of the posts in Class II. | Must have worked as Superintendent of the Accounts branch and as Accountant for a period of not less than two years in each of the post. |

மேற்கண்ட நிபந்தனைகளில் திருத்தங்கள் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண். 179 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.10.2009-ல்

"Must have worked for a period of not less than two years in the post of Superintendent or Assistant Revenue Officer"

என்ற நிபந்தனையின் அடிப்படையில் தற்போது காலியாகவுள்ள கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் பணியிடங்களில் தற்போது கண்காணிப்பாளர்களாக பணிபுரிந்து வரும் கீழ்கண்ட 5 நபர்களுக்கு 2006-ம் ஆண்டு வெளியிடப்பட்ட பணிமூப்புப் பட்டியலின் அடிப்படையில் 2010-2011-ம் ஆண்டிற்கு கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர் பணியிடங்களை நிரப்ப கீழ்க்கண்ட 5 நபர்களை ரூ.6500-200-10500 என்ற ஊதியத்திற்கு இணையான VI-வது ஊதியக்குழு பரிந்துரையின்படி கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலருக்கான ஊதியம் நிர்ணயம் செய்து பணி உயர்வு வழங்க பணி உயர்வுப் பட்டியல் தயார் செய்து மாமன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கும் ஆணையாளரின் குறிப்பு.

| வ.எண். | பணியாளர்களின் பெயர் | கண்காணிப்பாளர் பணியிடத்தில் பணிபுரிந்த விபரம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.சுந்தரமூர்த்தி<br>உதவி வருவாய் அலுவலர் ,<br>மேற்கு மண்டலம் | 25.02.2009 முதல் 17.06.2009 வரை மைய நகர்நலப்பிரிவு மற்றும் 18.06.2009 முதல் 22.02.2011 வரை மேற்கு மண்டலம் பொறியியல் பிரிவு கண்காணிப்பாளராகவும், 23.02.2011 முதல் உதவி வருவாய் அலுவலராகவும் பணிபுரிந்து வருகிறார். |
| 2 | திரு.என்.நாராயணன்<br>கண்காணிப்பாளர், தெற்கு மண்டலம் | 02.03.2009 முதல் கண்காணிப்பாளராக தெற்கு மண்டலத்தில் பணியாற்றி வருகிறார். |
| 3 | திருமதி.சுமதி<br>கண்காணிப்பாளர், வடக்கு மண்டலம் | 02.11.2009 முதல் வடக்கு மண்டலம் வருவாய் பிரிவில் கண்காணிப்பாளராக பணிஉயர்வு செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார். |
| 4 | திரு.முருகேசன்<br>உதவி வருவாய் அலுவலர், தெற்கு மண்டலம் | 02.11.2009 முதல் உதவி வருவாய் அலுவலராக தெற்கு மண்டலத்தில் பணியாற்றி வருகிறார். |
| 5 | திரு.வி.பாலசுப்பிரமணியன்<br>உதவி வருவாய் அலுவலர், வடக்கு மண்டலம் | 02.11.2009 முதல் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று வடக்கு மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறார். |

**குறிப்பு :–**

1. பணிவிதிகளின்படி கணக்கு அலுவலர் மற்றும் நிர்வாக அலுவலர் பணியிடங்கள் இரண்டாம்நிலை பணியிடங்கள், இவை இரண்டும் ஒரே சம்பள விகிதத்தில் உள்ளன.
2. இந்த இரண்டு பணியிடங்களும் மாநகராட்சி பணியாளர்களிலிருந்து பணி உயர்வு மற்றும் பணி மாறுதல் மூலம் நிரப்பப்படும் பணியிடம் ஆகும்.
3. மாநகராட்சிப் பணிவிதிகள் திருத்தம் செய்து வெளியிடப்பட்ட அரசாணை எண். 179 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MC4)துறை நாள் : 05.10.2009-ன்படி இரண்டு வருடம் கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் ஆகிய பணியிடத்தில் இரண்டு வருடம் குறையாமல் பணிபுரிந்திருக்கும் நபர்களை பதவி உயர்வின் மூலம் கணக்கு அலுவலர் / நிர்வாக அலுவலர்களாக பதவி உயர்வு செய்ய வேண்டும் என்று உள்ளது.
4. மேற்கண்ட நபர்கள் கண்காணிப்பாளர் / உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணி நிறைவு செய்த பின்னர் உரிய பணி உயர்வு வழங்கப்பட வேண்டும்.
5. இம்மாநகராட்சிப் பணியாளர்களால் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையிலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும் தொடர்ந்த வழக்கு எண்.WNo.375/2008, WP.No.486/2008, WP.No.5638/2008, WP.No.1994/2009, WP.No.2054/2009, WP.No.11437/2010, WP.No.10931/2010, WP.No.27375/2010, M.P.S.R.No.78221 to 78223/2010, W.P.(MD)No.7996/2010 ஆகிய வழக்குகளில் பிறப்பிக்கப்படும் நீதிமன்ற இறுதி ஆணைகளுக்குட்பட்டது.
6. அரசாணை எண் 24 (முப்பதாண்டு) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் : 11.08.2010–ம் அரசாணைக்கு உரிய தெளிவுரை கோரப்பட்டுள்ளது. அரசின் தெளிவுரைக்குட்பட்டு பணிஉயர்வு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

**மாமன்றத்தீர்மானம் எண்.53**

**மதுரை மாநகராட்சி சட்டம் 1971 எண்.15, பிரிவு 104–ன்படி இரண்டாம் நிலை பதவி உயர்வு பெறும் அலுவலர்கள் அரசால் உறுதியாக்கம் பெற வேண்டும். என்று தெரிவித்து குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது**

**14) ம.பொ.2/ 24680/2011**

மதுரை மாநகராட்சி, லாரி நிறுத்துமிடத்தில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு கடந்த 2006ம் ஆண்டு வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வந்த M.S.Bin மற்றும் G.I.Bin Dumper Bin–கள் (குப்பைத் தொட்டிகள்) சுமார் 70 பின்கள் (உத்தேச எடை 7000 கிலோ இரும்பு) தற்போது மிகவும் பழுதடைந்து உபயோகமற்ற நிலையில் உள்ளது. மேற்கண்ட குப்பைத் தொட்டிகளுக்கு உள்ளுர் சந்தை விலை விகிதம் ஒரு கிலோ ஒன்றுக்கு ரூ.16.25 வீதம் 7000 கிலோவிற்கு உத்தேச மதிப்பு ரூ.1,13,750/- ஆகும். எனவே மேற்கண்ட குப்பைத் தொட்டிகளை ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல நடவடிக்கை முறையில் விற்பனை செய்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலைக் கோரும் ஆணையாளர் அவர்களின் குறிப்பு.

**மாமன்றத்தீர்மானம் எண்.54**
**குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**நாள் :29.08.2011**

**மதுரை.**

**(ஒம்..) ஜி. தேன்மொழி**
**மேயர்**
**மதுரை மாநகராட்சி**

* * * * * * * *